www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR SC/ST ACT CASES, NAMAKKAL.

SPL.S.C. No.15/2023

P.W.9

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவா |
| தந்தை பெயர் | : | ஆண்டவர் |
| கிராமம் | : | ஆத்தூர் |
| வட்டம் | : | |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 25.09.2024.

எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் ஆயில்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2023ம் தேதி 18.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்துபோது ராசிபுரம் தாலுக்கா புதுப்பட்டி புதிய காலனியை சேர்ந்த ஆறுமுகம் மகன் பெரியசாமி அவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரையும் அத்துடன் இணைக்கபட்ட DVD, CD யையும் ஆயில்பட்டி காவல் குற்ற எண் 77/2023 சட்டபிரிவுகள் 3(1)(r), 3(1)(u) of SC/ST(PoA) Act ஆக வழக்கினை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் வாக்குமூலத்தையும் நாமக்கல்மாவட்ட அமர்வு சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களையும் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் மேலும் இவ்வழக்கு சாதிய வன்கொடுமை வழக்கு என்பதால் புலன் விசாரணை அதிகாரி நியமிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். இது சம்மந்தமாக 14.08.2023 தேதி ராசிபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-4.pdf

www.ecourtsindia.com



எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் பாதிக்கபட்ட நபர் புகார் அளித்தார்களா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்விடமாக எந்த இடத்தையும் குறிப்பிடவில்லை என்றால் வாட்ஸ் ஆப் வீடியோ காரணமாகத்தான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதே வழக்கு சம்பவம் குறித்து இதே எதிரிமீது ஆயில்பட்டி காவல்நிலைய குற்ற எண் 76/2023 ஆக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கையின்பேரில் எதிரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 அரசியல் கட்சியில் இருப்பதால்அவர் கொடுத்த அழுத்தத்தின்பேரில் எதிரி மீது பொய்யாக இந்தவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

Sd/P.Shanthi

அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம்,
நாமக்கல்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM120012082023-orderno-4.pdf